ஜம்இய்யதுல் உலமாவின் பெயரிலான

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

## ஒரு மறுவாசிப்பு



*அகில இலங்கை அஹ்லுல்பைத் ஜமாஅத்*

*- கல்குடா கிளை -*

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒரு மறுவாசிப்பு

அண்மையில் கல்குடா ஜம்இய்யதுல் உலமாவின் அழைப்பின் பேரில் கல்குடா உல்லாச விடுதி கேட்போர் கூடமொன்றில் எமது ஊர் முக்கியஸ்தர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடைபெற்றிருக்கிறது. உலமா சபையின் அழைப்பு என்று வெளியில் காட்டப்பட்ட போதிலும் இக்கருத்தரங்கை மிகத் தந்திரமாக வடிவமைத்து வழிநடத்தியவர்களும் அதற்கு நிதி அனுசரணை வழங்கியவர்களும் எமது பிரதேசத்தில் உள்ள கடும்போக்கு கொள்கையாளர்கள் என்பது அதில் கலந்து கொண்ட எல்லோருக்கும் தெரியும்.

பொதுவான சமூக விடயங்களைப் பேசுவதற்கான கருத்தரங்கு எனச் சொல்லப்பட்ட போதிலும் முழுமையாக ஷீஆ விரோத கருத்துக்கள் மாத்திரமே ஒருதலைப்பட்சமாக முன்வைக்கப்பட்டு, அவை எமது சமூக முக்கியஸ்தர்களின் சிந்தனையில் படுமோசமாக விதைக்கப்பட்டுள்ளன.

இது எமது பிரதேசத்தில் ஒற்றுமையாக வாழும் முஸ்லிம்கள் மத்தியில் ஷீஆ-சுன்னா வன்முறையொன்றுக்கு வழிவகுப்பதற்கான வியூகங்களின் ஆரம்பமாக இருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம். அவ்வாறான ஒரு நிலைக்கு எமது புத்திஜீவிகளும் ஊர் முக்கியஸ்தர்களும் இடமளிக்க மாட்டார்கள் என்பது திண்ணம். இது தொடர்பில் எமது பார்வையை தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி இத்துண்டுப் பிரசுரத்தை தங்களின் பார்வைக்கு முன்வைக்கின்றோம்.

ஷீஆக்கள் தொடர்பாக மிக உணர்வுபூர்வமாகவும் கண்ணீர் மல்கவும் அள்ளி வீசப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் ஒருதலைப் பட்சமானவையும் பிழையானவையும் என்பது ஷீஆக்களைக்

கண்டறிந்தவர்களான எங்களின் உறுதியான நம்பிக்கை. இக்குற்றச்சாட்டுகளை செவிமடுத்த நீங்கள், மறுதரப்பு வாதத்தையும் அறிந்தே முடிவெடுப்பது சரியான அணுகுமுறையாக இருக்கும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள்.

எமது பிரதேச உலமா சபை ஷீஆக்கள் தொடர்பாக அதனுடன் தொடர்புபடுபவர்களை அழைத்து இதுவரை காலமாக பேசாததின் மௌனத்தின் மர்மம் இன்னும் எமக்குப் புரியவில்லை! இப்பிரதேசத்தில் ஷீஆக்களாக பார்க்கப்படுபவர்கள் தவறான நம்பிக்கையில் இருக்கின்றார்கள் என்றால் அவர்களின் தவறை சுட்டிக்காட்டுமிடத்து அதனை ஏற்று நடக்கும் பக்குவம் கொண்டவர்களாக அவர்கள் காணப்படுகின்றார்கள். உலமா சபையைச் சேர்ந்த அஹ்லுஸ் சுன்னா உலமாக்கள் இதற்கு முன்வராமலிருப்பது ஏன்?

எமது பார்வையில் ஷீஆக்களை ஒழித்துக்கட்ட இன்று வரிந்து கட்டிக் கொண்டு செயற்படும் கடும்போக்காளர்கள் வஹ்ஹாபிஸ சிந்தனை கொண்டவர்கள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இவர்கள் ஷீஆக்களை ஒழித்துக்கட்ட மாத்திரம் அஹ்லுஸ் சுன்னா இயக்கங்களோடு கைகோர்த்து நிற்பதும் அஹ்லுஸ் சுன்னாக்களுக்குள் மறைந்திருப்பதும் எல்லோரும் அறிந்த இரகசியம். ஷீஆக்களைப் பார்ப்பது போன்றுதான் அஹ்லுஸ் சுன்னாக்களையும் ஏனைய பிரிவுகளையும் இக்கடும்போக்காளர்கள் பார்க்கிறார்கள் என்பதை எமது உலமாக்கள் புரியாலிருக்கமாட்டார்கள்.

இவர்களின் பிரிவினைவாத செயற்பாடுகளுக்கு ஜம்இய்யதுல் உலமா எனும் புனித அமைப்பையும் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் வேதனை தருவதாக உள்ளது. சமூகத்தை சீராகவும் ஒற்றுமையாகவும் வழி நடத்த வேண்டிய சுன்னத்வல்ஜமாஅத் உலமா தலைமைகள் இவர்களின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் சமூகத்தை வழிநடத்துவது காலத்தின் தேவையாகும். ஷீஆக்களை காபிர்களெனத் தீர்ப்பளித்து நரகவாதிகளாக பார்க்கும் இக்கடும்போக்காளர்கள் சுன்னத்வல் ஜமாத்தினரையும் (மத்ஹபுகளைப் பின்பற்றுதல், தொழுகையில் கூட்டு துஆ ஓதுதல்,

குனூத் ஓதுதல், மீலாத் விழா கொண்டாடுதல்...போன்ற பித்அதுகளை செய்யும் பித்அத்வாதிகளாக கணித்து, பித்அத் செய்பவர்கள் நரகவாதிகள் என்று சுன்னத் வல்ஜமாஅத்தினரையும்) நரகவாதிகளாகவே பார்ப்பது நாம் சொல்லித்தான் நீங்கள் புரியவேண்டியதில்லை.

சமகால சுன்னத்வல்ஜமாஅத்தினர் அஷ்அரிய்யா அகீதாவைப் பின்பற்றுபவர்கள். அஷ்அரிய்யா, வழிகெட்ட இயக்கம் என இக்கடும்போக்காளர்கள் நம்புகின்றார்கள் (பார்க்க: இஸ்லாத்தின் பெயரால் தோன்றிய இயக்கங்கள், பக்கம் 178, எம்.ஜே.எம்.ரிஸ்வான் மதனி)

இக்கடும்போக்காளர்கள் அள்ளி வீசியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் ஷீஆ உலமாக்கள் மிகக் காத்திரமான முறையில் பதிலளித்துள்ளனர். துருப்பிடித்த இக்குற்றச்சாட்டுகள் எமது பிரதேச மக்களுக்குத்தான் புதிது என்பதை நாம் இங்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

உலகின் மொத்த முஸ்லிம் சனத் தொகையில் ஷீஆ முஸ்லிம்கள் நான்கில் ஒரு பகுதியினராக (55கோடி) உலகில் வாழ்கிறார்கள். சவூதி (17 வீதம்) குவைத், கட்டார்...போன்ற நாடுகளில் இவர்கள் தமது மற்ற சுன்னி சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழும்போது எமது பிரதேசத்தில் மாத்திரம் ஷீஆக்கள் பிரச்சினைக்குரியவர்களாகவும் காபிர்களாகவும் ஆக்கப்படுவதேன்?

வருடாந்தம் இலட்சக்கணக்கான ஷீஆக்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்காவுக்கு வருவதை நீங்கள் அறியாமலில்லை. இவர்கள் காபிர்களென்றால் வஹ்ஹாபிஸத்தின் மையமாகவும் வஹ்ஹாபி முப்திகளின் ஆதிக்கத்திலிருக்கும் சவூதி அரேபியா, ஷீஆக்களுக்கு ஹஜ் செய்ய அனுமதி வழங்குவதேன்? புனித மக்காவில் முஸ்லிமல்லாதவர்கள் வாழ்வதற்கென்று ஒரு பிரத்தியேக எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஷீஆக்கள் காபிரென்றால் அதற்குள் அல்லவா அவர்களுக்கு இடம் வழங்கப்பட வேண்டும்?

மேலும், உலக இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் அங்கத்துவம்

வகிக்கும் சர்வதேச அமைப்பு ‘இஸ்லாமிய நாடுகளின் அமையம்’ (OIC) ஆகும். இதன் தலைமைத்துவம் கடந்த வருடங்களில் ஈரானுக்கு வழங்கப் பட்டிருந்தது. ஏனைய எல்லா முஸ்லிம் நாடுகளும் இதனை அங்கீகரித்திருந்தன. ஈரான் முஸ்லிம் அல்லாத நாடென்றால் இவ்வாறான தலைமைத்துவம் எவ்வாறு வழங்கப்பட்டிருக்க முடியும்?

“இலங்கையில் இதுவரையும் இல்லாத ஷீஆக்கள் இப்போது இந்நாட்டில் கால் பதிக்க ஆரம்பித்துள்ளனர், சமூகத்திற்குள் இருக்கும் பிரச்சினையை இது இன்னும் அதிகரிக்கச் செய்யும்” என்று கூக்குரலிடும் இக்கடும்போக்காளர்கள் எப்போது இந்த நாட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவர்கள்? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டுமல்லவா?

சுமார் பத்து வருடங்களுக்கு முதல் எமது பிரதேசத்தில் வஹ்ஹாபிஸம் இருந்ததா? எத்தனை பள்ளிவாயல்களும் மத்ரஸாக்களும் காணப்பட்டன? இவ்வாறு வினா எழுப்பப்படும் போது, சகலரும் மரபுவழி முஸ்லிம்களாகவும் அஹ்லுஸ் சுன்னாக்களாகவும்தான் இருந்தார்கள். மூன்று மத்ரஸாக்களும் நான்கு அல்லது ஐந்து ஜும்ஆப் பள்ளிகளும்தான் இருந்தன. இன்று இவை எத்தனையாக மாறியிருக்கிறன என்பதை நாம் உங்களுக்கு எண்ணிக் கட்டாத் தேவையில்லை.

அதேநேரத்தில் ஷீஆக்கள் இலங்கையில் நேற்று இன்று உருவாகியவர்களல்லர் என்பதை நாமிங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். உமையா ஆட்சிக்காலத்தில் (குறிப்பாக யசீத், ஹஜ்ஜாஜ் பின் யூசுப் போன்றோரின் காலப்பகுதியில்) நபிகளாரின் பனீஹாஷிம் கோத்திரத்தினர் கர்பலா யுத்தம் போன்ற இன சுத்திகரிப்பு போர்கள் மூலம் துன்புறுத்தப்பட்டனர். இத்துன்பத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முயன்ற நபியவர்களின் கோத்திரத்தினரான பனீஹாஷிம்கள் மக்கா, மதீனா போன்ற இடங்களைத் துறந்து இலங்கை போன்ற நாடுகளின் கரையோரப் பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். இங்கு வந்தவர்கள் மௌலானா (சாதாத்) பரம்பரையான நபிகளாரின் அஹ்லுல்பைத் குடும்பத்தைச் சேர்ந்த

ஷீஆக்களாக் காணப்பட்டார்கள். இவர்கள் பலரின் அடக்கஸ்தலங்கள் இன்றும் எமது நாட்டின் கரையோரப் பகுதிகளில் காணப்படுவதும், அவர்களின் (முஹர்ரம், ஆஷூரா உள்ளிட்ட) பல கலாசார விடயங்கள் இன்னும் உயிர்ப்பிக்கப்படுவதும் ஷீஆக்களின் வரலாறு இந்த நாட்டில் மிகப்பழமையானது என்பதைப் பறைசாற்றுகின்றன.

ஷீஆக்களைப் பற்றிய உண்மையான தகவல்களைத் தெரிந்து வைத்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த பல சுன்னத்வல்ஜமாஅத் உலமாக்கள் இருக்கின்றார்கள். அவர்களில் எவரும் ஷீஆக்களை சாடவுமில்லை சீண்டவுமில்லை. ஷீஆ நம்பிக்கைகள் எதுவும் இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு முரணானதும் அல்ல என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளார்கள். இறைவன், இறைத்தூதர், மறுமை, குர்ஆன், கிப்லா,.. போன்ற எல்லா நம்பிக்கைகளிலும் சக முஸ்லிம்களின் நம்பிக்கைக்கு ஒத்ததாகவே அவர்களின் நம்பிக்கைகள் காணப்படுகிறன என்பது அவர்கள் கண்டறிந்த உண்மைகளாகும்.

அண்மையில் எமது நாட்டிலுள்ள சில அரபுக்கல்லூரி அதிபர்கள், மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அங்கத்தவர்களில் சிலர் உள்ளடங்கிய உலமா குழுவொன்று ஈரானுக்கு ஒரு மாதகால பிரயாணமொன்றை மேற்கொண்டது. அவர்கள் அங்கு நேராக விடங்களைக் கண்டவர்கள் என்ற வகையில் அவர்களின் பார்வையை நீங்கள் தெரிந்து கொண்டால் இக்கடும்போக்காளர்கள் எமது சமூகத்தை எதனை நோக்கி வழிநடத்துகின்றார்கள் என்பதை நீங்கள் மிக இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

ஷீஆக்களை ஒழித்துக் கட்டிவிட்டால் அடுத்தது என்ன? என்ற இன்னுமொரு வினா எமக்கெழுகிறது. அஹ்லுஸ் சுன்னா சமூகம் பின்பற்றி வரும் மரபுவழி இஸ்லாமிய நம்பிக்கைகளை ஒவ்வொன்றாகக் களைய ஆரம்பித்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். இதுவரைக்கும் முன்னடுக்கப்பட்ட இக்கடும்போக்காளர்களின் செயற்பாடுகள் இதனை சான்று பகர்வதை எவராலும் மறுப்பதற்கில்லை. எஞ்சியிருக்கும் மார்க்க

விடயங்களில் கூட சந்தேகங்களை உருவாக்கி, உருவாக்கி மார்க்கப் பற்றையும் சமய உறுதியையும் இல்லாமலாக்கி விடுவார்கள்.

அவர்களின் வழியில் சென்றால் சொற்ப காலத்தின் பின் தமது வழிநடத்துதலில் தவறிழைத்துள்ளதாகக் கருதி, கொடுத்த பத்வாக்களை வாபஸ் பெற்றுக் கொள்வார்கள். பீ.ஜே. என்ற வஹ்ஹாபிஸ சிந்தனையாளர் தான் கொடுத்திருந்த பல பத்வாக்களை அதில் தவறிருப்பதாகவும் அதனை வாபஸ் வாங்குவதாகவும் அண்மையில் அறிவித்திருந்ததை நீங்கள் அறியாமலிருக்க மாட்டீர்கள்.

தமது செயற்பாடுகளை இச்சமூகம் பிழையாகக் காணாமலிருப்பதற்கும் தமது பணிகளை மிகத் தந்திரமாக முன்னெடுக்கவும் சமூகத்தின் சிந்தனையைத் திசை திருப்புவதுதான் ஷீஆக்களை இக்கடும்போக்காளர்கள் திடீரென இலக்குவைப்பதற்கான காரணம் என நாம் நம்புகின்றோம்.

வரலாற்றாசிரியர்களின் கூற்றுக்கமைய ஷீஆ சுன்னா என்பது இன்று நேற்று தோன்றியதல்ல. நபிகளாரின் தோழர்களே ஷீஆவாகவும் சுன்னாவாகவும் பிரிந்திருந்தார்கள் (பார்க்க: கலாநிதி சுக்ரி, இஸ்லாமிய சிந்தனை 1980)

நபிகளாருக்குப் பின் இஸ்லாமிய தலைமைத்துவம் நபியவர்களால் நியமிக்கப்பட்ட அஹ்லுல்பைத்தினருக்கே வழங்கப்படவேண்டும் என ஷீஆக்கள் நம்பிக்கை கொள்ள, நபியவர்களுக்குப் பின் கிலாபத் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கலீபாக்களுக்கே உரியது என சுன்னாக்கள் நம்பிக்கை கொண்டார்கள். ஆயினும், அன்று தொட்டு இன்றுவரை இவ்விரு சமூகமும் ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வருகின்றன. 1400 வருடங்களாக இருக்கும் வரலாற்றுப் பிரச்சினையொன்றை இன்று தீர்த்துவிட சிலர் முயற்சிக்கின்றார்கள். முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பிளவு காணாததற்கு இன்னும் விரிசலை அதிகரிக்க உலக ஏகாதிபத்திய சதிக்கரம் செயற்படுகிறது என்பதை நாம் உணர்கிறோம்.

ஷீஆக்கள் அஹ்லுஸ் சுன்னாக்களுடன் ஒற்றுமையாக வாழக்கூடியவர்கள் என்பதை பல இஸ்லாமிய நாடுகள் பறைசாற்றுகின்றன. சினேகிதமாகவும் அன்னியோன்யமாகவும் வாழும் அவர்களிடையே குரோதத்தையும் மார்க்க விடயங்களில் வன்முறைகளையும் உருவாக்கிட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இன்று எமது சமூகத்தைப் பிரிக்கும் படியாக பள்ளிவாயல்களை நிர்மாணித்து, ஒரு ஊரில் ஒரு ஜூம்ஆப் பள்ளி என்று ஒன்றாக இருந்த எம்மக்களை பல பள்ளிகளுக்குள் பிரித்து, சில்லறைப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி பிளவுச் செயற்பாடுகளைச் செய்துவரும் இக்கடும்போக்காளர்கள் எமது ஒட்டுமொத்த முஸ்லிம்களின் இருப்புக்கும் ஆபத்தானவர்களாக மாறிவருகிறார்கள். இவர்களின் சமூக அக்கறையற்ற இப்போக்கு காரணமாக பெரும்பான்மை சமூகத்திலிருக்கும் (பொதுபலசேன போன்ற) இனவாதத்தை சீண்டியெழுப்பிய பெருமை இக்கடும்போக்காளர்களையே சாரும். இக்கடும்போக்கு இன்று தாலிபான், அல்கைதா, ஐ.எஸ்.ஐ.எஸ், போகோ ஹராம் என வடிவமெடுத்து உலகத்தாரின் பார்வையில் இஸ்லாத்தை தீவிரவாதமாகவும் பயங்கரவாதமாகவும் காண்பித்து வருகிறது. இந்த பயங்கரவாத அமைப்புகளெல்லாம் தமக்கான வழிகாட்டி நூலாகப் பயன்படுத்துவது, வஹாபிஸத்தின் தலைவர்களான இப்னு தைமியா மற்றும் முஹம்மத் இப்னு அப்துல் வஹாப் ஆகியோரின் சர்ச்சைக்குரிய நூல்களையே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஷீஆக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நோக்கும் போது இவ்வளவு பயங்கரமான நம்பிக்கைகளை ஒருமனிதன் எந்த இலாபத்திற்காக பின்பற்ற வேண்டும்? இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணான இந்நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து தனது மறுமை வாழ்வையும் தனது கப்றையும் பாழாக்கிக் கொள்ள எந்தவொரு மனிதனும் முன்வருவானா? என்ற கேள்விகள் எமக்குள் எழுகின்றன.

ஷீஆக்களை நாம் முஸ்லிம்கள் என்றுதான் நம்புகின்றோம். அவர்கள் இஸ்லாத்தின் வட்டத்திற்குள்ளே இருக்கின்றார்கள் என்பது சுன்னத்

வல்ஜமாஅத் இமாம்களின் பத்வா. எகிப்து அல்அஸ்ஹர் முப்தி ஷெய்க் ஷல்தூத், இஹ்வானுல் முஸ்லிமீன் ஸ்தாபகர் இமாம் ஹஸனுல் பன்னா, ஜமாஅதே இஸ்லாமியின் ஸ்தாபகர் மௌலானா மௌதூதி, இமாம் அலி ஜூம்ஆ, இமாம் அஹ்மத் தய்யிப்,.... போன்ற பல சுன்னத் வல்ஜமாஅத் அறிஞர்கள், ஷீஆக்கள் முஸ்லிம்கள்தான் என பத்வா வழங்கியிருக்கின்றார்கள்.

2004ம் ஆண்டு ஜோர்டான் தலைநகர் அம்மானில் 500 க்கும் மேற்பட்ட உலக இஸ்லாமிய அறிஞர்கள் கலந்து கொண்ட சர்வதேச மாநாடு நடைபெற்றது. சுமார் எட்டு நாட்கள் தொடராக நடைபெற்ற அம்மாநாட்டில் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை கருதி ஷீஆ (ஜஃபரி) மத்ஹபு உட்பட எட்டு மத்ஹபுகளை இஸ்லாத்திக்குட்பட்ட மத்ஹபுகள் என்று அங்கீகரித்து, இதனைப் பின்பற்றுவோரை காபிரெனக் கூற எவருக்கும் அதிகாரமில்லை எனப் பிரகடனம் செய்து கையொப்பமிட்டுள்ளார்கள். (பார்க்க: www.ammanmessage.com)

வஹ்ஹாபிஸம் சமூகத்திற்கு ஒரு கேடு என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள். அது வியாபித்த இடங்களிலெல்லாம் நிம்மதி மற்றும் பாதுகாப்பு என்பன அழிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாத, நாசகார தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தலைவிரித்தாடுகின்றன. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈராக், சிரியா, நைஜீரியா இதற்கு தகுந்த எடுத்துக்காட்டுகள். பண்பற்ற கலாசாரம் மேலோங்கி வருகிறது. பிள்ளைகள், மாணவர்கள் தம் பெற்றோர், ஆசிரியர்களுக்கு மரியாதை செய்தல் ஷிர்க், பித்அத் என்ற போர்வையில் தடுக்கப்பட்டு பல ஒழுக்கச் சீர்கேடுகள் உருவாகியுள்ளன. தம்மை மாத்திரம் தௌஹீதை பின்பற்றுபவர்கள் என்றும் தம்மைத் தவிர்ந்த மற்ற எல்லோரையும் ஷிர்க்கிலும் பித்அதிலும் இருப்பவர்கள் என்றும் இக்கடும்போக்காளர்கள் பார்க்கின்றனர்.

நபிகளாரின் உம்மத்தை மிகக் குறுகியதாகவும் சிறியதாகவும் பார்த்து தம்மை மாத்திரமே அந்த உம்மத் என எண்ணுகிறார்கள். சமூகத்தை ஆன்மீகப் பக்குவமற்ற அபாயகர சூழல் ஒன்றை நோக்கி இந்த வஹ்ஹாபிஸம் வழிநடத்துகிறது. திக்ரு, ஸலவாத்து ஓதல்கள்

குறைந்துள்ளன. இஸ்லாம் தடுக்காத பல ஆன்மீக விடயங்கள், கலாசார விழுமியங்கள் தடுக்கப்பட்டு மனிதர்களின் ஆன்மாக்களில் ஒரு வகையான நிம்மதியற்ற நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது. மார்க்க விடயங்களில் சந்தேகத்தை உருவாக்கி மனங்களில் ஒருவகையான அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன.

ஷீஆ எதிர்ப்பாளர்களாலும் ஷீஆ என்ற லேபலில் ஷீஆ வேடம் தரித்த பிரித்தானிய மற்றும் சியோனிச வாதிகளாலும் ஷீஆ நம்பிக்கைகள் போலியாக பிரசாரம் செய்யப்படுகின்றன. இதனை அவதானமாக கையாள்வது அவசியமாகும்.

எனவே, ஷீஆக்களை முறையாக அறிய அவர்களின் அறிஞர்களிடம் கேட்டறியவும் பார்த்தறியவும் முயற்சிக்கலாம். ஷீஆக்களை நேரடியாக கண்டறிவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும் எமது அமைப்புகள் தயாராகவே உள்ளன.

இப்பிரதேசத்தில் வாழும் ஷீஆ சமூகம், இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் பொதுத் தலைமைக்கு கட்டுப்பட்டுதான் வாழ்கிறது. தனித்து பெருநாளெடுக்கவோ, தனிக் கொள்கை மாநாடு நடாத்தவோ, தனிப்பள்ளிவாயல்களை நிறுவி தொழுகை நடத்தியோ சமூகப் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் எந்தச் செயற்பாடுகளையும் செய்யவில்லை.

ஆகவே, எமது சமூகத்தின் புத்திஜீவிகள், ஊர் முக்கியஸ்தர்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருப்பார்கள் என எதிர்பார்க்கிறோம் இன்ஷா அல்லாஹ்.

இறைவனே சாட்சியாளனும் போதுமானவனும்.